முன்மாதிரி காட்டவேண்டுமென்றால் ஒரு பரிசேயரைத் தான் காட்டலாம். ஆனால் இதற்கு முரண்பாடாக வரிவசூலிப்பவரை முன்மாதிரியாகக் காட்டுகிறார். வரிவசூலிப்பவர்கள், உரோமை அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பவர்களாக இருந்தனர். இது வரிவசூலிப்பவர்களுக்கு வரையறுக்கப்பட்ட வரிகளைவிட அதிகமாக வசூலிப்பதன் மூலம் தங்களுக்கும் எடுத்துக்கொள்ள அனுமதித்தது. இருப்பினும் இந்த உவமையில் ஒரு சீடரின் இறைவேண்டலுக்கு முன்மாதிரியாக வரிவசூலிப்பவரின் மனத்தாழ்மையை இயேசு முன்மாதிரி காட்டுகிறார். நாம் இறைவேண்டல் செய்யும்போது, நம்முடைய வாழ்வில் கடவுள் தேவை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும் என்பதை இந்த உவமை நமக்கு நினைவூட்டுகிறது. நம்மைப் பற்றியே அதிகம் அக்கறை கொண்டிருந்தால், கடவுளின் அருள் நம்மில் செயலாற்ற மிகக் குறைந்த இடமே உள்ளது.(லொயோலா அச்சகத்தின் வலைத்தளத்திலிருந்து எடுக்கப்பட்டது)

இந்த உவமை, மற்றவர்களின் தோற்றத்தைப் பார்த்து, நான் விரைவாக மதிப்பிடும் பல நிகழ்வுகளை எனக்கு நினைவூட்டுகிறது. அவர்கள் நடந்துகொள்ளும் விதம், அணியும் உடை, இறைவேண்டல் செய்யும் விதம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கடவுளுடனான அவர்களின் உறவு நல்ல நிலையில் உள்ளதா என்பதை நான் தீர்மானிக்கின்றேன். “தகுதியற்றவர்” என்று நான் தீர்ப்பளித்த நபர், நான் இறைவேண்டல் செய்து, கடவுளின் ஞானத்தைத் தேடவேண்டிய ஒரு கடினமான சூழ்நிலைக்கு தயக்கமின்றி பதிலளித்தபோது என்னை வியப்பில் ஆழ்த்திய ஒரு நிகழ்வை நான் நினைவுகூர்ந்தேன். அது என் ஆணவத்தைத் தகர்த்தது. எனவே என் அகங்காரம் மற்றவர்களை தீர்ப்பிடத் தொடங்கும்போது, நான் மனசாட்சியோடு என்னை சரிபார்த்துக்கொள்ள வேண்டும்.

கொல்கொத்தாவின் புனித அன்னை தெரேசா, “அவர் என்னை வெற்றிபெற அழைக்கவில்லை. உண்மையாக இருக்க என்னை அழைத்திருக்கிறார்” என்று கூறியதைப் புரிந்துகொள்ள மன்றாடுவோம்.

குறிப்பாக, குழப்பமான உலகில், உலகிற்கு ஒளியாக இருக்கவும், பிறருக்கு ஒளிவீசி பிரகாசிக்கவும், கிறிஸ்துவை நோக்கி மற்றவர்களை வழிநடத்தவும், நற்செய்தியைப் பரப்பவும் நாம் எப்போதும் அழைக்கப்பட்டுள்ளோம். ✜

தந்தை தம்முடைய அரசின் மறையுண்மைகளை வெளிப்படுத்துவதற்காக வாக்களித்த நற்செய்தியின் சிறு குழந்தைகளில் ஒருவராக நாங்களும் இணைக்கப்படும்படி எங்களுக்கு மனத்தாழ்மையை கற்றுக்கொடுக்குமாறு நாங்கள் மன்றாடுகிறோம்.

புனித இரண்டாம் ஜோன் போல்

### இன்றைய இறைவார்த்தை:

சீராக்கின் ஞானநூல்: 35: 12-14, 16-19

திருப்பாடல்: 34: 2-3, 17-19, 23

2 தீமோத்தேயு: 4: 6-8, 16-18

லூக்கா 18: 9-14

INTERNAL CIRCULATION ONLY
BUL 43/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org

NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் 30 ஆம் ஞாயிறு | 26 அக்டோபர் 2025

எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:
சமுதாயம் (இறைவாக்குரைத்தல்)
நற்செய்தி மதிப்பீடுகளை வலுப்படுத்த அழைப்பு

# மனத்தாழ்மையால் ஒளி வீசும் நம்பிக்கை

இன்றைய ஞாயிறு நற்செய்தியில் இறைவேண்டலின் மனப்பான்மையை இயேசு குறிப்பிடுகிறார். பரிசேயரின் இறைவேண்டலையும், வரி வசூலிப்பவரின் இறைவேண்டலையும் வேறுபடுத்தி, இயேசு தம் சீடர்களுக்கு மனத்தாழ்மையுடன் இறைவேண்டல் செய்யக் கற்றுக்கொடுக்கிறார். பரிசேயரைவிட வரிவசூலிப்பவரை நம்பிக்கையின் முன்மாதிரியாகக் காட்டி, இயேசு மீண்டும் கேட்போரை வியப்பில் ஆழ்த்துகிறார். இறைவேண்டலுக்கு

